திரு, உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மழை பெய்யாமல் தரிசாகக் கிடக்கக்கூடிய பகுதியில், பின்னால் மழைபெய்துமுளைத்துப்போகிற அந்தப் பகுதியில்உள்ளவிவசாயி களுக்கு, சிறு விவசாயிகள் பெரிய விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயிகளுக்கும் குறைந்த விலையில் விதைகள் கொடுத்துதவ அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அனைத்து விவசாயிகளுக்கும் என்ற அளவுகோல் சரியற்றது, முறையற்றது, நியாயமற்றது.

கோவை வேளாண்மை பொறியியல் துறையிலுள்ள கிணற்றிற்குத் துளைபோடும் இயந்திரம்

(68*வினா எண். 19114) திரு எம். ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை நிர்வாகத்தில் இயங்கும் கிணற்றிற்கு போர் போடும் இயந்திரம் பழுதடைந்துள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) இதனால் விவசாயிகளின் தோட்டக் கிணறுகளை போர் போட முடியாமல் அவதியுறுவது அரசு அறியுமா?

(இ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) பழுதாக இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் போர் போடும் இயந்திரம் பழுதடையவில்லை என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியில் 'சைட் போர்' போடுவதற்கு இயந்திரம் வேண்டுமென்று சொல்லி விவசாயிகள் மனு செய்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. பழுதடைந்துள்ளது இயந்திரம் எனவே கொடுக்கமுடியாது என்று என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் அமைச்சர் அவர்கள் இயந்திரம் பழுதாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கக்கூடிய தகவல் தவறாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படியிருந்தாலும் கூட, உடனடியாக விவசாயிகளுக்கு 'சைட் போர்' போடுவதற்கு இயந்திரம் வேண்டும் என்று கேட்கக்கூடிய நேரத்தில் அதை உடனடியாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பது, கிணறுகளுக்கு துளை போடுகின்ற கருவி, இந்த மாநிலத்திலே மொத்தத்தில் நான்குதான் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கருவிக்காக விண்ணப்பம் செய்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வரிசைக் கிரமத்தில் வழங்கப்படுகின்றபோது, அவர்களுக்கு அது வந்து சேருவதிலே காலதாமதம் ஏற்படக்கூடும். ஹாமர் டிரில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் பழுதடைந்து இருந்தது. அது இப்போது சரி செய்யப்பட்டிருக்கிறது. இது அனைத்து விவசாயிகளுக்கும் உடனடியாக கொடுக்கக்கூடிய அளவில், நம்மிடம் கருவிகள் இல்லை என்பதுதான் குறை.

(முற்பகல் 9.30)

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே வேளாண்மை பொறியியற் அலுவலகத்திற்குச் சென்று, போர் போடுவதற்கு இயந்திரம் வேண்டுமென்று நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். சில விவசாயிகள் மனு போட்டிருக்கிறார்கள், அது இரண்டாண்டுகளுக்கு மேலாகிறது, ஏன் கொடுக்கவில்லை என்று கேட்ட நேரத்தில், அந்த இயந்திரம் பழுதடைந்திருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, இப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடிய சூழ்நிலையில், கோவை மாவட்டத்தில் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், 200 அடி, 300 அடி தோண்டினாலும், தண்ணீர் இல்லாத இந்த காலகட்டத்தில், வேளாண்மை பொறியியற்துறை ஏற்கனவே விண்ணப்பித்துள்ளவர்களுக்கு அந்த இயந்திரத்தை முறையாக விநியோகிப்பதற்கு, அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் இரண்டு ஹாமர் டிரில்களும், ஒரு துளைக் கருவியும்தான் இருக்கிறது. ஆகவே, அவைகளைப் பயன்படுத்தி மாவட்டம் முழுவதிலும் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு வசதி செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, அங்குள்ள அனைத்து விவசாயிகளுக்கும் எந்த அளவுக்கு அனுதாபம் காட்ட வேண்டுமோ, அந்த அளவுக்கு அனுதாபம் காட்டி செயல் படுத்தப்படும்.

திரு வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிணறுகளுக்கு சைடில் துளை போடுவதற்கு விவசாயிகள் இந்தத் துறையை அணுகுகின்றபோது அவர்களை அதற்கான முனையை வாங்கித் தரவேண்டும் என்று சொல்வதோடு, அதற்கான ஊசலையும் வாங்கித் தரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒரு 100, 200 அடி துளை போடுவதற்கு, இந்த முனையை ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கவேண்டியிருப்பதால் சிரமமாகயிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, தனிப்பட்டவர்களுக்கு அடிக்கு இவ்வளவு என்று நிர்ணயிப்பதுபோல், விவசாயிகளுக்கும் இப்படி வேளாண்மை பொறியியற் துறை நிர்ணயிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

தமிழ்நாட்டில் பழம் காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம்

87— (*வினா எண் 20544)—திரு ஏ. எம். சேதுராமன், திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் பழம், காய்கறிகள் பதப்படுத்திக் கெடாமலிருக்க நவீன வசதியுடன் கூடிய நிலையங் கள் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: ஆம்.

திரு பெ. சு. திருவேங்கடம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த இடங்களில் இதைக் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 17 இடங்களில் தாம்பரம், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் கடலூர், சேலம், ஓசூர், கோவை, மேட்டுப்பாளையம், ஈரோடு, திருச்சி' தஞ்சை, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, நெல்லை, நாகர்கோயில்.

திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு இடத்திலும் கட்டுவதற்கு எவ்வளவு பணம் செலவாகின்றது? இந்த 17 இடங்களிலும் கட்டஆகும் மொத்தச் செலவு எவ்வளவு? இவைகளைக் கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த 17 இடங்களில் கட்டுவதற்கு ஆகும் மொத்த செலவு 893.82 இலட்சம். இதற்கு உலக வங்கியின் உதவியைப் பெற யிருக்கிறோம். மைய அரசிற்கு நாம் கருத்துருவை அனுப்பியிருக் கிறோம். பணம் கிடைத்தவுடன், இந்த வேலை ஆரம்பிக்கப்படும்.

.திரு சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் பல ஊர்களைச் சொன்னார்கள். அதிலே எங்கள் பகுதியும் இருக்கிறது. தக்காளிப்பழம் சில நேரங்களில் அதிகமாக உற்பத்தியாவதால், சில நேரங்களில் அழுகிப்போய் குப்பையிலே போடவேண்டிய சூழ்நிலை ஏற்படு